**20.12.2022**

**OS.No. 311/2021 PW : 3, திரு. வெங்கடேசன்**

**குறுக்கு விசாரணை...**

நான் கேபிள் டி.வி.யில் வேலை செய்கிறேன். நான் சின்னம்மா பேட்டையில் குடியிருக்கிறேன். அங்கே தான் வேலையும் செய்கிறேன். வாதி பிரதிவாதியின் தாயாருக்கு கடன் கொடுத்தது சம்பந்தமாக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் பிரதிவாதியை இதுவரை பார்த்ததில்லை. புஷ்பா என்பவர் யார் என்று கேட்டால் அவர் வாதியிடம் கடன் வாங்கியவர் ஆவார். வாதி என் உறவினர் இல்லை. புஷ்பா என்பவர் என்ன வேலை செய்தார் என்று கேட்டால் அவர் வட்டி தொழில் செய்வதாக புஷ்பா என்னிடம் கூறினார். புஷ்பா என்பவரை 3 வருடமாக அதாவது வாதியின் வீட்டிற்கு வாடகை வந்ததிலிருந்து எனக்கு தெரியும். என் முதல் விசாரணையில் என்ன சொல்லியிருக்கிறேன் என்று கேட்டால் பணம் கொடுத்த விவரம் எனக்கு தெரியும் என்று சொல்லியிருக்கிறேன். வாதி புஷ்பாவிற்கு பணம் கொடுத்தது எனக்கு நேரடியாக தெரியும். 2லட்சம், 3 லட்சம் என்று அவ்வப்போது வாதி புஷ்பாவிற்கு பணம் கொடுத்தார். என்ன எழுதச் சொல்வார்கள். நான் எழுதினேன். எதில் எழுதினேன் என்று கேட்டால் பச்சை நிற காகிதத்தில் எழுதினேன். நான் எழுதுவதற்கு முன்னர் அதில் வேறு ஏதாவது எழுதப்பட்டிருந்ததா என்று கேட்டால் பணம் கொடுத்த விவரம் எழுதப்பட்டிருந்தது. பேப்பரின் வேறு என்ன இருந்தது என்று கேட்டால் அது எழுதப்பட்டிருந்தது. அதில் கையொப்பம் போட்டார்கள். நான் எந்த தேதியில் எழுதினேன் என்று கேட்டால் எனக்கு ஞாபகமில்லை. எந்தெந்த

தேதியில் எவ்வளவு எவ்வளவு பணம் கொடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது. நான் எழுதும் போது வாதி புஷ்பாவிற்கு பணம் கொடுத்தார்களா என்று கேட்டால் கையில் பணம் வைத்திருப்பார்கள். நான் எத்தனை தேதிகளில் எழுதியிருப்பேன் என்று கேட்டால் தோராயமாக 6, 7 தேதிகளில் எழுதியிருப்பேன். நான் எழுதியதற்கு பின்னர் வேறு யாரும் எழுதவில்லை. ரூபாய் 20 ஆயிரம் கொடுத்தற்கு மட்டும் கடைசியில் கையொப்பம் போட்டார்கள். சாட்சிகள் யாராவது கையொப்பம் போட்டார்களா என்று கேட்டால் நான் தான் கடைசியாக சாட்சி கையொப்பம் போட்டேன். நான் ஒரே ஒரு கையொப்பம் மட்டும் இடது பக்கத்தில் கையொப்பம் போட்டேன். புஷ்பா என்பவர் எதற்காக கடன் வாங்கினார் என்று எனக்கு தெரியுமா என்று கேட்டால் அவர் வட்டிதொழில் செய்தவற்காக கடன் வாங்கினார். என்னுடன் வேறு யார் சாட்சி கையொப்பம் போட்டார்கள் என்றால் நான் மட்டும் கடைசியாக சாட்சி கையொப்பம் போட்டேன். அதற்கு முன்னர் அமுல்ராஜ், சுரேந்திரன் ஆகியோர்கள் சாட்சி கையொப்பம் போட்டுள்ளார்கள். சுரேந்தரன் என்பவர் வாதியின் மகன். கடைசியாக நான் எப்போது எழுதினேன் என்று கேட்டால் சுமார் 1 வருடத்திற்கு முன்பு இருக்கும். சாட்சி தற்போது 2 வருடத்திற்கு முன்பு இருக்கும் என்று சொல்கிறார். நீல நிற பந்துமுனை பேனாவால் எழுதினேன். நான் 10ஆம் வகுப்புவரை படித்திருக்கிறேன்.

Sd/- S. Ganapathisamy,
I Additional District and Sessions Judge,
Tiruvallur.